

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | ஏப்ரல் 21, 2022 | புரட்சி 21 | முழக்கம் 14 | விலை: ரூ.3.00

## கொளத்தூரில் ஜாதி மறுப்பு இணையர்களுக்கு பாராட்டு

# கழகம் எடுத்த அம்பேத்கர் விழா எழுச்சி

*கழக சார்பில் அம்பேத்கர் பிறந்தநாள் எழுச்சியுடன் நடத்தப்பட்டது.*

15.4.2022 திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் சேலம் மேற்கு மாவட்டம் கொளத்தூர் பேருந்து நிலையத்தில் மாலை 6.00 மணியளவில் அம்பேத்கர் பிறந்தநாள் விழா ஆணவக் கொலைகளுக்கு எதிராக சட்டப் போராட்டம் நடத்தி வரும் வழக்கறிஞர்களுக்கு பாராட்டு விழா சாதி மறுப்பு இணையர்கள் பாராட்டு விழா நடைபெற்றது.

விழாவில் கொளத்தூர் நகரச் செயலாளர் பா. அறிவுச்செல்வன் வரவேற்புரையாற்றினார். சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் சி. கோவிந்தராசு, கொளத்தூர் நகர தலைவர் சி.இராமமூர்த்தி, பெரியாரிய அம்பேத்கரிய உணர்வாளர் தீன ரட்சகன் ஆகியோர் முன்னிலை வகிக்க கழக தலைமைக்குழு உறுப்பினர் காவை ஈஸ்வரன் தலைமை ஏற்றார்.

தமிழ்நாடு மாணவர் கழகப் பொறுப்பாளர் சந்தோஷ் உரையை தொடர்ந்து ஆணவப் படுகொலைக்கு எதிராக சட்டப் போராட்டம் நடத்தி வரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வழக்கறிஞர் ப.பா. மோகன், வழக்கறிஞர் கார்த்திகேயன், பகுஜன் சமாஜ் கட்சி வழக்கறிஞர் பார்த்திபன் மற்றும் கொளத்தூர் பகுதியில் சாதி மறுப்புத் திருமணங்களை முன்னின்று நடத்திவரும் காவை ஈஸ்வரன் மற்றும் சாதி மறுப்பு இணையர்கள் செல்வன் - இளமதி, கோகுலக்கண்ணன் - பிரேமா, அருண்பாண்டி - குமுதா, டேவிட் - நந்தினி, கிருஷ்ணன் - மணிமேகலை, சிரிதர் - தேவிபிரியா ஆகியோரைப் பாராட்டி நினைவுப் பரிசை கழகத் தலைவர் கொளத்தூர் மணி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி துணைப் பொதுச் செயலாளர் வன்னி அரசு ஆகியோர் வழங்கினர்.

கோகுல்ராஜ் கொலை வழக்கு பற்றிய விவரங்களை வழக்கறிஞர்கள் பார்த்திபன், கார்த்திகேயன் ஆகியோர் உரையாற்றினர்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி துணைப் பொதுச் செயலாளர் வன்னி அரசு கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோரின் சிறப்புரையை தொடர்ந்து கழக கொளத்தூர் ஒன்றிய பொறுப்பாளர் சுதா நன்றியுரை கூற கூட்டம் சிறப்பாக நிறைவடைந்தது. விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் கொளத்தூர் ஒன்றிய செயலாளர் சேட்டு குமார் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைத்து தோழர்களுக்கும் மாட்டுக்கறி அசைவ உணவு வழங்கி சிறப்பித்தார்.

கூட்டம் தொடங்குவதற்கு முன் புரட்சியாளர் அம்பேத்கர், பெரியார் பற்றிய வீடியோ தொகுப்பு காட்சிகள் மற்றும் நடந்த கதை குறும்படம் பெரிய திரையில் ஒளிபரப்பப்பட்டது. சிறப்புரையாளர்கள் பேச்சை தொடங்கும் முன் அவர்களைப்பற்றிய வீடியோ தொகுப்பும் ஒளிபரப்பப்பட்டு பேச அழைக்கப்பட்டனர்.

விழாவின் புகைப்படங்கள் மற்றும் காணொளி ஆகியவற்றை கொளத்தூர் கபிலன் ஸ்டுடியோ இளவரசன், கபிலன் அவர்கள் சிறப்பாக பதிவு செய்தார். நிகழ்ச்சி ஏற்பாட்டு குழு தோழர்கள் காவை.ஈசுவரன், இராஜேந்திரன், செல்வேந்திரன், விஜய்குமார், SMT சுரேஷ், இராமமூர்த்தி, அறிவுச்செல்வன், இராஜா, மாரிசெட்டி, குமார், ஆட்டோ செல்வம் ஆகியோர்.

பொதுக்கூட்ட களப்பணியில் செயல்பட்ட தோழர்கள் கார்த்திக், அகிலன், பிரவின்குமார், தீனா, சத்தீஸ்வரன்.. லிங்கேஸ்வரன்... புவனேந்திரன்... பிரவீன், சூர்யா, ஜீவா, விஜய் சூர்யா ஆகியோர் சிறப்பாக செயல் பட்டனர்.நிகழ்ச்சி ஏற்பாட்டு குழு தோழர்கள் காவை. ஈசுவரன், இராஜேந்திரன், செல்வேந்திரன், விஜய்குமார், SMT சுரேஷ், இராமமூர்த்தி, அறிவுச் செல்வன், இராஜா, மாரியண்ணன், குமார், ஆட்டோ செல்வம் ஆகியோர்.

பொதுக்கூட்ட களப்பணியில் செயல்பட்ட தோழர்கள் கார்த்திக், அகிலன், பிரவின்குமார், தீனா, சத்தீஸ்வரன், லிங்கேஸ்வரன், புவனேந்திரன், பிரவீன், சூர்யா, ஜீவா, விஜய் சூர்யா ஆகியோர் சிறப்பாக செயல்பட்டனர்.

**சென்னையில் :** ஏப். 14, காலை 9 மணியளவில் புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளை முன்னிட்டு 14.02.22 அன்று காலை புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கு சென்னை மாவட்டக் கழக சார்பில் மாலை அணிவித்து கொள்கை முழக்கங்கள் எழுப்பப் பட்டன. இந்நிகழ்வில் கழக முன்னணி பொறுப் பாளர்களும் தோழர்களும் பெருந்திரளாய் பங்கேற்றனர்.

நிகழ்வில், தலைமை நிலைய செயலாளர் தபசி குமரன், தலைமைக்குழு உறுப்பினர்கள் அய்யனார், அன்பு தனசேகர், மாவட்டத் நலைவர் வேழவேந்தன், மயிலை




சுகுமார், இராவணன் ஆகியோர் உட்பட சென்னை கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

அம்பேத்கர் பிறந்தநாள் விழாவை ஒட்டி, நமக்கான அடையாளம் “திராவிட மாடல்” மண்டல மாநாட்டிற்கான தொடக்கக் கூட்டம், நடேசன் சாலை சந்திப்பு பேருந்து நிறுத்தம் அருகில் 14.04.2022 வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் தொடங்கி நடைபெற்றது.

நிகழ்வின் தொடக்கமாக, கழகத் தோழர் நாத்திகன், அருள்தாசு ஆகியோர் பகுத்தறிவுப் பாடல்களை பாடினர். தொடர்ந்து, தமிழ்நாடு மாணவர் கழகம் தேன்மொழி , நமக்கான அடையாளம் திராவிட மாடல் -யை விளக்கி உரையாற்றினார்.

அடுத்ததாக, கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், பாஜகவின் மாநில உரிமை பறிப்பு, மதவாத திணிப்பு, கல்வி உரிமை தடுப்பு ஆகியற்றிற்கு தீர்வு திராவிட மாடலில் அடங்கியுள்ளது. பா.ஜ.க. ஏழை எளிய இந்துக்களை வதைத்து பார்ப்பன - பனியா பெருமுதலாளி இந்துக்களையே கொழுக்க வைக்கிறது என்பதை சான்றுகளுடன் விளக்கினார். நிகழ்வை மாவட்ட செயலாளர் உமாபதி தொகுத்து வழங்கினார்.

இறுதியாக, சமத்துவ நாள் உறுதிமொழி தமிழ்நாடு மாணவர் கழகம் தேன்மொழி கூற, தோழர்கள் தொடர்ந்து கூறி உறுதிமொழி எடுத்தனர்.

**சேலம் :** ஏப்ரல் 14 புரட்சியாளர் அம்பேத்கார் பிறந்த நாளை முன்னிட்டு சேலம் மாவட்ட திராவிடர் விடுதலை கழகத்தின் சார்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் டேவிட் மாவட்ட அமைப்பாளர் ஏற்காடு பெருமாள் மற்றும் இளம்பிள்ளை பகுதி தோழர்களும் நங்கவள்ளி பகுதி தோழர்களும் சேலம் நகர பகுதி தோழர்களும் கலந்து கொண்டனர்.

**மேட்டூரில் :** 14.04.2022 காலை 10.00 மணியளவில் மேட்டூர் அச்சங்காடு பகுதியில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு சேலம் மேற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் சி.கோவிந்தராசு தலைமையில் மாலை அணிவித்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

நிகழ்ச்சியில் சேலம் மேற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக தலைவர் தோழர் சூரியகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர் தோழர் அ.சக்திவேல்,மேட்டூர் நகர அமைப்பாளர் தோழர் பாஸ்கர் ,மேட்டூர், மேட்டூர் RS, காவேரி கிராஸ் ஆகிய பகுதிகளில் இருந்து பொறுப் பாளர்களும், தோழர்களும் கலந்து கொண்டனர்.

**விழுப்புரத்தில் :** புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த நாள் விழா 14.04.22 அன்று காலை விழுப்புரம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழத்தின் சார்பில் கண்டமங்கலத் தில் கொள்கை முழக்கம் மற்றும் உறுதியேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

**காரைக்குடியில் :** காரைக்குடியில் திராவிடர் விடுதலை கழகத்தின் சார்பில் நடைபெற்றது. காலை 10.30 அளவில், காரைக்குடி அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

**திருப்பூரில் :** புரட்சியாளர் அம்பேத்கரின் 131ஆவது பிறந்த நாள் விழா 14.04.2022 வியாழன் காலை திவிக சார்பாக பொருளாளர் சு.துரைசாமி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

கருத்துரை வழங்கியோர் பொருளாளர் சு.துரைசாமி, தமிழ்நாடு அறிவியல் மன்றம் தலைவர் வி சிவகாமி, துணை பொதுச்செயலாளர் விசிக துரை வளவன், மாவட்டத் தலைவர்முகில் ராசு.

கலந்து கொண்டோர் : மாவட்ட அமைப்பாளர் அகிலன், மாவட்ட அமைப்பாளர் சங்கீதா, தெற்குப்பகுதி கழக செயலாளர் இராமசாமி, மாநகரத் தலைவர் தனபால், மாநகர அமைப்பாளர் முத்து, தனகோபால், வேலம்பாளையம் பொறுப்பாளர் மாரிமுத்து, சரசு, முத்து லட்சுமி, அய்யப்பன், விஜய், சிரிஜா, திலகவதி, இராஜ சிங்கம், தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்கள் மகிழவன், ஈழமாறன், கனல்மதி, பெரியார் பிஞ்சு, அமுதினி, யாழிசை, யாழினி, பிரபன்யா அசுவின், மெல்வின்.

ஆத்துப்பாளையம் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் 131 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா திமுக அலுவலகத்தில் திவிக மாநகர தலைவர் தோழர்.வீ.தனபால் தலைமையில் நடைபெற்றது.

**சிறப்பு அழைப்பாளர்கள் :** தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் ஆசிரியர் சிவகாமி, மாவட்டத் தலைவர் முகில் இராசு, மாவட்ட அமைப்பாளர் திவிக சங்கீதா, மாநகர அமைப்பாளர்முத்து, தனகோபால், விஜய், மதன் மளிகை, பிரபு திருப்பூர், ஸ்ரீஜா, மாரிமுத்து, வேலம் பாளையம் பகுதி பொறுப்பாளர், திராவிடர் விடுதலைக் கழகம், கனல்மதி-யாழினி, தமிழ்நாடு மாணவர் கழகம் பெரியார் பிஞ்சுகள்- யாழிசை பிரபன்யா ஆகியோர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்அறிவித்த சமத்துவ நாள் உறுதிமொழியை யாழினி வாசித்தார். தோழர்கள் அனைவரும். உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள்.

கலந்து கொண்டவர்கள் : திமுக 10வது வார்டு வட்டக் கழக செயலாளர் சாமிநாதன், 10-வது வார்டு வட்ட கழக பொறுப்பாளர் தோழர் மணிமாறன், 10-வது வார்டு மாமன்ற உறுப்பினர் தோழர் கோட்டா பாலு, திருப்பூர் மாவட்ட கட்டுமான தொழிலாளர் முன்னேற்ற சங்க பொதுச்செயலாளர் ஆர்.ரங்கசாமி, திமுக ஆட்டோ ஓட்டுநர் சங்கம் அய்யப்பன், மணிகண்டன், பூபதி (திமுக), இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் பொறுப் பாளர் ஆத்துப்பாளையம் சந்தோஷ், இசைப்பிரியன், அம்பேத்கர் நகர்அன்பழகன் (திமுக), இறுதியில் பரந்தாமன் நன்றி உரையாற்றினார்.

**உடுமலையில் :** புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த நாள் நிகழ்ச்சி 14.04.22 அன்று திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தோழமை இயக்கத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கொழுமம் ஆதி, செல்லமுத்து, சுந்தர்ராஜன், சாதிக் பாட்சா, திராவிட மணி மூர்த்தி, பாண்டியநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். ஏற்பாடு: உடுமலை திராவிடர் விடுதலைக் கழகம்.

**பேராவூரணியில் :** புரட்சியாளர் அம்பேத்கரின் 132ஆவது பிறந்த நாளை முன்னிட்டு 14.04.2022 அன்று காலை தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி பேருந்து நிலையத்தில் உள்ள புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கு கழகத்தின் சார்பில் மாவட்ட அமைப்பாளர் சித. திருவேங்கடம், பேராவூரணி ஒன்றிய அமைப்பாளர் மருத.உதயகுமார் ஆகியோர் கழகத் தோழர்களுடன் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

**கோவையில் :** திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த நாள் நிகழ்வு 14.04.22 அன்று காலை காந்திபுரம் பெரியார் சிலை முன்பு ரஞ்சித் தலைமையில் அம்பேத்கர் படத்துக்கு கொள்கை முழக்கங்கள் எழுப்பி மரியாதை செலுத்தப்பட்டது. புரட்சித் தமிழன் கொள்கைப் பாடலை பாடினார்.

**தலையங்கம்**

## இலங்கை நெருக்கடி: இந்தியாவுக்கும் எச்சரிக்கை தான்!

ராஜபக்சே குடும்பம் பதவியிலிருந்து வெளியேற வேண்டும் என்று ‘மக்கள் புரட்சி’ கொழும்பில் வெடித்து வரும் நிலையில் அதிபர் கோத்தபய ராஜபக்சே ‘புண்ணுக்கு புனுகு’ பூசுவதுபோல் அமைச்சரவை மாற்றம் என்று நாடகமாடுகிறார். மக்களுக்கு அடிப்படைத் தேவையான பொருள்களை வழங்க அடுத்த 6 மாதத்துக்கு அவசரமாக 3 மில்லியன் டாலர் தேவை என்ற நிலையில் சர்வதேச நிதி நிறுவனத்திடம் ‘பிச்சைப் பாத்திரம்’ ஏந்தி நிற்கிறது, இலங்கை அரசு. கடந்த ஏப்ரல் 12ஆம் தேதியில் இலங்கையின் மத்திய வங்கி, 1948ஆம் ஆண்டுக்குப் பிறகு மிக மோசமான நெருக்கடிக்கு பொருளாதாரம் உள்ளாகியுள்ளதை எச்சரித்துவிட்டது. சிக்கலிலிருந்து மீண்டு எழும் வழி தெரியாது, இலங்கையின் பொருளாதார ஆலோசகர்கள் விழிபிதுங்கி நிற்பதாக செய்திகள் வருகின்றன. ஒரு நாடே ‘திவாலாகி’க் கொண்டிருக்கிறது. இந்த நெருக்கடி எதை உணர்த்தி நிற்கிறது?

நாட்டின் மக்கள் வாழ்வதாரம் - பொருளாதாரம் - வளர்ச்சிக் கட்டமைப்புகளைப் புறந்தள்ளிவிட்டு மத வெறி மற்றும் இன வெறியைத் தூண்டி விடுவதில் மட்டும் கவனம் செலுத்தும் அரசுகள் இந்தப் படுகுழிக்குள் தான் மூழ்கிப் போகும் என்பதுதான் இலங்கை நெருக்கடி உணர்த்தும் முக்கியப் பாடம்.

சமையல் எரிவாயு, கெரசின், பால் பவுடர், டீசல், பெட்ரோல் என்ற அடிப்படைத் தேவைகளுக்காக கொழும்பு நகரில் நீண்ட வரிசையில் இப்போது சிங்களர்கள், தமிழர்கள், இஸ்லாமியர்கள் நட்பு உணர்வோடு கைகோர்த்து நின்பதை ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு (ஏப். 17, 2022) சுட்டிக்காட்டி விரிவான கட்டுரை எழுதியுள்ளது. ‘ராஜபக்சே குடும்பம் பதவி விலக வேண்டும்’ என்பதே இனங்களைக் கடந்த ஒரே முழக்கமாகிவிட்டது. இதே கொழும்பில் 1958, 1983இல் கொழும்பில் தமிழர்களுக்கு எதிராக பெரும் கலவரத்தில் சிங்களர் இறங்கியபோது தமிழர்களின் வடக்கு மாகாணத்தில் மைனாரிட்டிகளான சிங்களர்களைக் காப்பாற்றியவர்கள் தமிழர்கள் என்று இலங்கை இராணுவ தளபதியாக இருந்து, இப்போது, தொழில்துறை அமைச்சர்களின் செயலாளர் பொறுப்பு வகிக்கும் ஆர்.எம். ரத்னாயக்கே கூறியுள்ளார். தமிழர்கள் மீதான இன அழிப்புக்கு வருத்தம் தெரிவித்து சிங்களர்கள் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர். தமிழ் ஊடகவியலாளர் நிலாந்தன், தமிழர் பகுதி சிங்களர் பகுதியைவிட அமைதியாகவே இருக்கிறது என்கிறார். தமிழர்கள் மத நம்பிக்கையாளர்கள். மாறாக சிங்களர்கள் மத வெறியூட்டப்பட்டவர்களாக (அனைவரும் இல்லை என்றாலும்) தூண்டப்பட்டவர்கள்.

இந்திய ஒன்றியத்திலும் மக்கள் பிரச்சினைகளி லிருந்து அரசின் பொருளாதாரக் கொள்கைத் தோல்விகளை திசைதிருப்ப, மதவெறியை பா.ஜ.க.வும் சங்பரிவாரங்களும் திட்டமிட்டு தூண்டி விடுன்றன. ராமநவமி, அனுமன் ஜெயந்தி ஊர்வலங்கள் பல மாநிலங்களில் பெரும் கலவரங்களாக வெடித்துள்ளன. தலைநகரம் டெல்லி பதட்டத்தில் மூழ்கிக் கிடக்கிறது. கொரானா தொற்று காலத்தில் இந்திய ஒன்றிய அரசின் அலட்சியத்தால் 40 இலட்சம் பேர் மரணித்துள்ளனர் என்றும் உண்மையை மக்களுக்குத் தெரியாமல் அரசு மறைத்துள்ளது என்றும் உலகின் புகழ்மிக்க அமெரிக்காவின் ‘நியுயார்க் டைம்ஸ்’ செய்தி வெளியிட் டுள்ளது. உலக சுகாதார நிறுவனம் இந்தியாவில் நடந்த மரணம் குறித்து கணக்கீடு செய்த முறை தவறானது என்று சமாளிக்கிறது. ஒன்றிய ஆட்சி, உண்மைகளை வெளியிட்ட உலக சுகாதார நிறுவனத்தைக் கண்டிக்கிறது. ஆனால் நாட்டின் பொருளாதாரம் மிகச் சிறப்பாக முன்னேறி வருவதுபோல உண்மைக்கு மாறான பரப்புரைகளை பா.ஜ.க.வினர் செய்து வருகிறார்கள்.

நாட்டின் வலிமை என்பது மக்களின் வாழ்வுரிமை யில் தங்கியிருக்கிறதே தவிர, மதங்களின் அடையாளங் களுக்குள்ளோ அல்லது மதவெறிக்குள்ளோ இல்லை என்பதை ஒன்றிய ஆட்சி உணரும் காலம் நெருங்கி வருகிறது. சோனியா, மு.க. ஸ்டாலின் உள்ளிட்ட 13 கட்சித் தலைவர்கள் விடுத்துள்ள கூட்டறிக்கையில் ஒன்றிய ஆட்சியின் நச்சு சித்தாந்தங்களின் ஆபத்தை சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்; இலங்கை ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் போன்ற நாடுகளின் மதவெறி கொள்கையால் அங்கே நெருக்கடிகளையும் குழப்பங்களையும் சந்தித்து வருவதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

# மயக்க மருந்து இல்லாது மனவசியம் செய்து, அறுவை சிகிச்சை செய்ய முடியுமா?

**எட்வின் பிரபாகரன்**

‘நிமிர்வோம்’ மாத இதழில் 2020ஆம் ஆண்டில் வெளி வந்துள்ள கட்டுரையை அதன் முக்கியத்துவம் கருதி மீண்டும் வெளியிடுகிறோம்.

**புதிர் 6:** ராபர்ட் எம். மில்லெர் என்ற விஞ்ஞானி தன்னுடைய தோட்டத்தில் புற்களை வளர்த்தார். பிரார்த்தனை களுக்கு சக்தி உண்டா? என்பதை அறிய ஒரு சோதனையை நடத்தினார். பிரார்த்தனைக்கு பேர் போன ஒல்க வோரல் & அம்புரோசு தம்பதியினரை தன் வீட்டில் பிரார்த்தனை செய்ய அழைத்தார். அவர்கள் பிரார்த்தனை செய்யாத நேரத்தில் 0.00625 அங்குலம் வளர்ந்த புற்கள், பிரார்த்தனை செய்யும் போது, 0.0525 அங்குலம் வளர்ந்ததைக் கண்டார். பிரர்த்தனைக்கு சக்தியுண்டு என்பதை உணர்ந்து கொண்டார்.

**உச்ச நீதிமன்ற நீதிபதி இராம சுப்ரமணியம் போலி அறிவியல் வாதங்களுக்கு ஆணித்தர மறுப்பு (4)**

**விடை:** முதலில் இது நடந்த சம்பவமா? கற்பனையா? என்று சந்தேகிக்க வேண்டியுள்ளது. எப்படி யிருப்பினும், தாவரங்களின் வளர்ச்சி எவற்றை சார்ந்து உள்ளது என்பதை இங்கு காண்போம். பொதுவாக, ஒரு தாவரத்தின் வளர்ச்சி, ஒளி, நீர், தட்ப வெப்பநிலை, சத்துப் பொருள்கள் போன்றவற்றை சார்ந்து தான் இருக்கிறது. பிரார்த்தனையினால் தாவரம் வளர்ந்ததாக எந்த ஒரு ஆய்வு அறிக்கையும் இல்லை. ஒருவேளை மேற்கூறிய சம்பவம் உண்மையாக நடந்திருந்தால், அதற்கு வேறு சில அறிவியல் காரணங்கள் இருக்கலாம். தாவரங்கள், பொதுவாக மாலை & இரவு நேரங்களில் அதிகமாக வளர்கின்றன. அந்த நேரத்தில் பிரார்த்தனை செய்தால், தாவர வளர்ச்சிக்கு பிரார்த்தனை தான் காரணம் என்று தவறாக முடிவெடுக்க வேண்டி யிருக்கும். அதேபோல், சில தாவரங்கள் ஒலியைச் சார்ந்து வளர் கின்றன. “Research in Plant Diseases” (தாவர நோய்களில் ஆராய்ச்சி) என்ற ஆய்விதழில் 2014 ஆம் ஆண்டு வெளியான “Update on the effects of sound wave on plants” என்ற ஆய்வறிக்கையில், குறிப்பிட்ட மாதிரி யான ஒலியை எழுப்புவது, சில தாவரங் களின் வளர்ச்சிக்கு பயன்படும் என்று கூறப்பட்டுள்ளது. எனவே, பிரார்த் தனையின் போது, குறிப்பிட்ட ஒலியால் வளரக் கூடிய தாவரமாக அந்த புற்கள் இருந்திருந்தால், ஒலியினால் வளர்ந் திருக்குமேயன்றி பிரார்த்தனையால் வளர்ந்திருக்க முடியாது. அதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

**புதிர் 7:** ஜேம்ஸ் எஸ்டெய்ல் (1808 - 1859) என்ற அறுவை சிகிச்சை நிபுணர், பிரிட்டிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தில் வேலை பார்த்தார். அப்போது, மயக்க மருந்து இல்லாமல், hypnotism (அறிதுயில் நிலை - மன வசியம்) மூலம் நோயாளி களை அரை மயக்க நிலையடையச் செய்து அறுவை சிகிச்சை செய்து சாதனை படைத்தவர். மனவசியத்துக்கு இன்று வரை எந்த அறிவியல் விளக்க மும் இல்லை. ரமண மகரிஷி தன்னைத் தானே மன வசியம் செய்துகொண்டவர்.

**விடை:** ஜேம்ஸ் எஸ்டெய்ல் செய்த மன வசியத்தின் பலன் எதுவும் ஆய்வு செய்யப்பட்டு, ஆவணப்படுத்தப் படவில்லை. எனவே, அது மிகவும் பலனளிக்க வல்லது என்று கூற முடியாது. இன்று வரை, hypnotism (அறிதுயில் நிலை) என்பதை ஒரு பெரும்பயனுள்ள முறை என்று நிரூபிக்க போதிய சான்றுகள் இல்லை. எனவே, மன வசியம், மாற்று மருத்துவத்தின் பகுதி யாகத் தான் பார்க்கப்படுகிறது. எனவே, மனவசியத்தை பற்றிய மிகைக்கூற்றை ஏற்க முடியாது. அதுவும், ரமண மகரிஷி இதை செய்தார் என்று நம்புவதற்கு எந்தவித முகாந்திரமும் இல்லை. தனது சொத்துக்களையெல்லாம் குடும்பத்தினருக்கு எழுதி வைத்துவிட்டு புற்று நோயால் மரணமடைந்தவர் ரமணரிஷி.

(கட்டுரையாளர் கழக செயல்பாட்டாளர்)

(தொடரும்)

## வினா – விடை

- அயோத்தியா மண்டப லரவு செலவு ஆராய அரசு குழு அமைப்பு. **– செய்தி**

  அதுக்கு ‘ஆகமம்’ அனுமதிக்குமா?

- திருப்பதியில் தங்க ரதத்தில் ஏழுமலையான் பவனி. **– செய்தி**

  அதுவும் சரிதான். பெட்ரோல், டீசல் வாகனத்தில் போனால் ஏழுமலையானுக்கு கட்டுப்படியாகாது.

- ஒரு கால பூஜை நடக்கும் கோயில்களுக்கு மின் கட்டணத்தை அரசே செலுத்தும். **– செய்தி**

  அதெல்லாம் ஏற்க முடியாது. கோயில் பிரச்சினைகளில் அரசு தலையீட்டை அனுமதிக்க மாட்டோம்; புரிஞ்சுக்குங்க.

- வரும் தேர்தலில் 25 பா.ஜ.க. எம்.பி.க்கள்; 5 காபினட் அமைச்சர்களைப் பெறுவதே பா.ஜ.க.வின் இலக்கு. **– அண்ணாமலை**

  குடியரசுத் தலைவருக்கு அப்படி ஒரு நியமன அதிகாரம் வழங்கப் போறீங்களா, ஜீ?

- ‘நீட்’ தேர்வை ரத்து செய்யும் ‘சூட்சமம்’ என்ன ஆனது?**– ஜெயக்குமார்**

  இவுரு வேற; அப்பப்ப குறுக்கும் நெடுக்கும் சைக்கிள்ள வந்து போய்கிட்டு இருக்காரு.

# சுயமரியாதையின் அடையாளம் மாநில சுயாட்சி

***ஏப். 14, 2022 அன்று திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய அம்பேத்கர் பிறந்தநாள், சமத்துவ நாள் கூட்டத்தில் ஆற்றிய உரையின் சுருக்கம்.***


**ச. தேன்மொழி**
**(தமிழ்நாடு மாணவர் கழகம்)**


மாநில சுயாட்சியின் அடிப்படை நோக்கம் சுயமரியாதைத் தத்துவம். மாநில சுயாட்சி என்ற வார்த்தைக்கு, மாநிலங்களின் அடிப்படை உரிமை, பொருளாதாரச் சுதந்திரம், அனைவருக்கும் சமமான சரி நிகர் வாழ்வாதாரம், இன உணர்வு என்ற பல்வேறு கோணங்களில் அர்த்தங்களைப் பார்த்திருப்போம், படித்திருப்போம். ஆனால் இவை எல்லாவற்றிர்க்கும் மேலாக "சுயமரியாதை" என்ற தத்துவமே மாநில சுயாட்சியின் அடி வேராக விளங்குகிறது என உறுதியாகக் கூறலாம்.

**மாநில சுயாட்சி திராவிடத்தின் கொள்கை :** 1962 அக்டோபர் வேலூர் சிறையில் இருந்து விடுதலையான பின் மாநில சுயாட்சிக்காக அண்ணா முன் வைத்த முழக்கம் "திராவிட நாடு பிரிவினையைக் கைவிட்டு விட்டோமே தவிர அதனைக் கேட்பதற்கு உரிய காரணங்கள் அப்படியே இருக்கின்றன. அந்தக் காரணங்களை நான் விட்டுவிடவில்லை" என்றார்.

நமது பள்ளிப்பருவத்திலேயே படித்து இருப்போம் இந்தியா ஒரு மத சார்பற்ற நாடு, பன்முகத்தன்மை கொண்டது இந்தியா, வேற்றுமையிலும் ஒற்றுமை காணும் இந்தியா, இப்படி பல்வேறு வாசகங்களைக் கேட்டு கடந்து தான் அனைவரும் வந்திருப்போம். மாநில சுயாட்சியின் நோக்கமும் இதுவே... இந்தியா என்பது பல்வேறு மாநிலங்களை ஒன்றிணைத்துள்ள ஒரு ஒன்றியம் அல்லது கூட்டமைப்பு ஆகும். அனைத்து மாநில அரசுகளுக்கும் அவரவர் தேவைகளை நிறைவு படுத்தும் வண்ணம் அனைத்து உரிமைகளையும் பெற்றிருக்க வேண்டும் என்பதே இதன் முக்கியக் குறிக்கோள். ஆனால் உண்மையில் இந்திய ஒன்றியத்தில் அப்படியொரு அம்சம் காணப்படவில்லை. இங்கே நாகரீக வாழ்க்கைக்கு அடிப்படை தேவைகளாக உள்ள கல்வி மற்றும் பொருளாதாரம் போன்ற உரிமைகள் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதால் மாநில அரசுகள் சுதந்திரமாக எதையும் செய்ய இயலவில்லை.

பலமான மத்திய அரசு வேண்டும் என்று கூறுகிறார்கள். மத்திய அரசுக்கு பலம் எதற்காக? அந்த பலன் யாருக்கு எதிராக? என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பலம் என்பது தனிப்பட்ட ஆளுக்கு இருக்கலாம்; தனிப்பட்ட அமைப்புக்கு இருக்கலாம்; மாநில துரைத்தனத்துக்கு இருக்கலாம்: மத்திய துரைத்தனத்துக்கு இருக்கலாம்; அந்தப் பலன் யாருக்கு எதிராக பயன்படுத்துவது என்பது பற்றி விளங்கிக் கொள்ளாமலும், விலகிச் செல்லாமல் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

"மக்களின் சுக துக்கங்களோடு பின்னிப் பிணைந்து இருப்பது மாநில அரசு தானே தவிர மத்திய அரசு அல்ல. மக்கள் மீது அக்கறை இருக்கலாம் அது எப்படிப்பட்ட அக்கறை! குடிசைப் பகுதியில் தீப்பற்றியதும் மூன்றாவது மாடியில் உள்ள சீமான் ஏதோ கரும்புகை தெரிகிறதே, பெரும் தீவிபத்து போலிருக்கிறதே! என்று கூறுவானே அதைப் போன்ற கதை தான் அது. ஆனால் குடிசைப் பகுதியில் தீப்பற்றியதும் துடிப்பவர்கள் யார்? அந்த குடிசை வீட்டுக்கு பக்கத்தில் உள்ள குடிசை வாசி தான். அதைப்போல மாநில அரசினர் தான் மக்களின் குறைகளை நேருக்கு நேர் சந்திக்க வேண்டியவர்கள் என நமக்கான தேவையையும் மாநில-ஒன்றிய அரசுகளின் கடமையையும் எளிமையாக விளக்கியுள்ளார் அறிஞர் அண்ணா.

இதன் வெளிப்பாடு ஒன்று தனக்கான உரிமையை கேட்டுப் பெறுவது அது தான் சுயமரியாதையை உணர்வுள்ள மாநில சுயாட்சித் தத்துவம்.

**கொத்தடிமையாக்கும் ஒன்றியக் கடன் :** மத்திய அரசு வழங்கும் கடன் திட்டத்தைப் பற்றி அண்ணாவின் பார்வை :

"அரசியலமைப்புச் சட்டம் உருவானதற்குப் பின்னர் மாநில தன்னாட்சியை மாநிலங்களே கெடுத்துக் கொள்வதற்கு மத்திய அரசால் செய்யப்பட்ட ஒருவகை ஏற்பாடு தான் மத்தியக் கடன்கள் ஆகும். அய்ந்தாண்டு திட்டங்களில் வழங்கப்படும் விருப்ப மானியங்களின் மூலமாக மத்திய அரசு மாநில தன்னாட்சியின் ஒரு கண்ணை மாநிலத்தின் கையாலேயே குத்திக் கொள்ள வைக்கின்றது. மேலும், மத்தியக் கடன்களை மாநிலங்களுக்கு வழங்குவதன் மூலம் மாநில தன்னாட்சியின் மற்றொரு கண்ணும் மத்திய அரசால் குத்தப்படுகிறது. மாநிலங்களால் கடன்களை மறுக்கவும் முடியவில்லை ஆனால் திருப்பிக் கட்டவும் முடியவில்லை.

கம்ப ராமாயணத்தில் 'இலங்கை வேந்தன்' தான் இறக்கும் முன்னர் கடன்பட்ட நெஞ்சம்போல் கலங்கினானோ என்னவோ நமக்குத் தெரியாது. ஆனால் மத்திய அரசிடமிருந்து கடன் பட்ட மாநில நெஞ்சங்கள் தீராத வேதனையில் துடித்துச் சாகும் நிலையை நாம் நாளும் காண்போம்".

சம காலத்தில் கோடியில் புரள்கிற அம்பானி, அதானி குழுமங்களுக்கு பல கோடி ரூபாய் கடன்களை தள்ளுபடி செய்தும், ஒரு வருடத்திற்கும் மேலாக பல உயிர் பலிகளை கொடுத்து போராடி வந்த விவசாயிகளை சற்றும் மதிக்காமல் இருந்த ஒன்றிய அரசின் போக்கை நாம் அனைவரும் கண்டிருப் போம்.

மக்களின் மனநிலையையும், சிரமத்தையும் புரிந்து கொள்ளாத ஒன்றிய அரசைப் புரிந்து கொள்வதற்கு இதைவிட ஒரு சிறந்த எடுத்துக்காட்டு வேறு இல்லை.

**பிரிவினைவாத நோக்கமுடையதா மாநில சுயாட்சி ? :** பெரியார் தனித்தமிழ் நாடு வேண்டும் என்ற போதும் சரி, அண்ணா திராவிட நாடு வேண்டும் என்ற போதும் சரி பல தேசியவாதக் குழுக்களும் அந்த சித்தாந்தத்தில் உள்ள தலைவர்களும் இது பிரிவினை வாதத்தை ஊக்குவிக்கிறது. இந்த எண்ணத்தை முழுமையாகத் தடை செய்ய வேண்டும் என்று பொங்கிவிட்டனர். ஆனால் நிதர்சனம் என்னவெனில் பல்வேறு பெரிய நாடுகளில் இருந்து பல மாகாணங்கள் பிரிந்து சென்று சிறு நாடுகளாக மாறி பல்வேறு வளர்ச்சியை எட்டியுள்ளது.

நமது இந்தியாவில் இன்றளவும் ஜாதிய உணர்வு பலதரப்பட்ட மக்களின் மனதிலும் ஊறிப்போய்க் கிடக்கிறது. ஊராட்சி மன்றத் தலைவர், கவுன்சிலர் என பதவிகள் கிடைத்தாலும் ஜாதியின் காரணமாக சுதந்திர தினத்தில் தேசியக் கொடியை ஏற்றக் கூட உரிமை மறுக்கப்படுகிறது.

வெவ்வேறு ஜாதியை சார்ந்த ஆண்-பெண் காதலித்து மணம் முடிப்பதை இந்திய சமூகம் இன்னும் ஏற்றுக் கொள்ளத் தயங்குகிறது. அவர்களை மான பங்கப்படுத்தி, பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கி ஏன் ஆணவக் கொலை கூட செய்யத் துணிகின்றனர்.

அடுத்தது மதம், இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு என்று வாயளவில் பெருமை பேசிக்கொண்டு இங்குள்ள சிறுபான்மை மத மக்களை பெரும்பான்மையாக இருக்கின்ற ஒரு காரணத்தால் இந்துத்துவ மத வெறியாளர்கள் எவ்வளவு கொடுமைகளுக்கு உள்ளாக்குகின்றனர். மாமிசம் சாப்பிடக் கூடாது குறிப்பாக மாட்டுக்கறி, ஆங்கிலப் புத்தாண்டுக்கு தேவாலயங்களில் பிரார்த்தனைக் கூட்டம் நடத்தக் கூடாது, இப்போது பரவலாக பேசப்பட்ட சம்பவம் ஹிஜாப் அணியக் கூடாது என்பதெல்லாம் எந்த வகை மத சார்பின்மையை சாரும்?

இதில் இல்லாத பிரிவினை வாதம் தான் தனி நாடு கோரிக்கையில் வந்துவிடப் போகிறதா? ஒரு மனிதன் இயல்பாக வாழ்வதற்கே தனியுரிமை (privacy) என்ற கோட்பாடு தேவைப்படும் பட்சத்தில் ஒரு அரசாங்கம் தன் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்து, வாழ வைப்பதற்கு தன்னாட்சி (Autonomy) என்பது அவசியம். இந்தக் கருத்தில் பிரிவினை வாதம் இருக்கிறது என்று கண்டறிபவர்கள், இந்த மனித இனத்தின் அறிவியல் வாழ்வியல் முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கும் ஜாதி, மத, மூட நம்பிக்கை, ஏற்றத் தாழ்வுகளில் உள்ள பிரிவினை வாதத்திற்கு எதிராகவும் குரல் கொடுத்தால் மகிழ்ச்சி தான்.

### மாநில சுயாட்சியின் பயன்கள் – திராவிடத்தால் தமிழகம் அடைந்த வளர்ச்சி

**கல்வி :** எந்தவொரு சமூகமும் முன்னேற்றமடைய கல்வி என்பது மிக மிக அவசியமான பேராயுதமாக இருக்கிறது. திராவிடச் சித்தாந்தம் என்பது கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும் கொள்கைகளைக் கொண்டு தமிழகத்தை பகுத்தறிவால் செதுக்கியுள்ளது. ஒரு நாட்டின் கல்வியின் அளவீடு என்பது மக்கள் பெற்றுள்ள படிப்பறிவு மற்றும் எழுத்தறிவை (literacy) மட்டுமே வைத்து கணக்கிட்டு விட முடியாது. மாறாக GER - Gross Enrollment Ratio அதாவது உயர் கல்வி பயில்வோரின் சேர்க்கை விகிதத்தின் அடிப்படையிலேயே கல்வியை துல்லியமாக அளவிட முடியும். அப்படி பார்த்தோமேயானால் தமிழ்நாடு- 51% மற்றும் இந்தியா - 26% GER இல் அளவிடப்பட்டுள்ளது. எனவே இந்தியாவைக் காட்டிலும் தமிழகம் கல்வியில் சிறப்பாகவே விளங்குகிறது. இது திராவிட ஆட்சிகளினால் ஏற்பட்ட மாற்றம். கல்வி மாநிலப் பட்டியலில் இருந்தால் தான் அந்தந்த மாநிலத்தில் உள்ள கல்வி கட்டமைப்புக்கு ஏற்றவாறு திட்டங்களை வகுத்து மாநில அரசு மாணவர்களின் எதிர்காலத்தைச் சிறப்பாக்க முடியும்.

**பொருளாதாரம் :** கல்வியைப் போலவே பொருளாதாரத்தை அளவிடவும் GDP - Gross Domestic Product அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்தி என்ற அளவுகோல் பயன்படுத்தப்படுகிறது. மற்ற மாநிலங்களை ஒப்பிட்டு பார்த்தால் தமிழகம் GDP ல் இந்தியாவிலேயே 2 வது இடத்தில் உள்ளது. அப்போது முதல் இடத்தில் உள்ள மாநிலம் எதுவாக இருக்கும் என்றால் மகாராஷ்டிரா தான். இங்கு தான் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டிய தேவை உள்ளது. மகாராஷ்டிராவைவிட தமிழகத்தில் தான் தொழிற்சாலைகளின் எண்ணிக்கையும், தொழிலாளர்களின் எண்ணிக்கையும் அதிகம். ஆனால் தமிழகத்தின் பல பெரிய நிறுவனங்களின் தலைமைக் கிளை மும்பையை மையமாகக் கொண்டு செயல்படுவதால், வரி செலுத்தும் போது இங்குள்ள அதன் துணைக் கிளைகளும் மும்பைக்கு சேர்ந்த நிறுவனங்களாகவே போய்விடுகிறது. எனவே தான் தமிழகம் இரண்டாம் இடத்திலும், மகாராஷ்டிரா முதல் இடத்திலும் இருக்கிறது. அப்படியல்லாமல் எண்ணிக்கையை மட்டும் கணக்கில் கொண்டால் மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் தமிழகம் முதல் இடத்தில் இருக்கும்.

**சுகாதாரம் :** GER, GDP போன்றே சுகாதார கட்டமைப்பை அளவிடவும் IMR - Infant Mortality Rate அதாவது குழந்தைகள் இறப்பு விகிதம் என்ற அளவீட்டை வைத்து நிர்ணயிக்கலாம். அப்படி பார்த்தால் இந்தியாவின் மொத்தத்தில் 1000 க்கு 32 குழந்தைகள் பிறக்கும் போது இறந்து விடுகின்றன. ஆனால் தமிழகத்தில் 1000 க்கு 16 குழந்தைகள் தான் இறக்கின்றன. இது மொத்த இந்தியாவுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் மிகவும் குறைவு. காரணம் இங்குள்ள சுகாதாரத்துறையில் ஆரம்ப சுகாதார நிலையம் முதல் பல்நோக்கு மருத்துவமனை வரை செய்யப்பட்டுள்ள வசதிகள். இதிலும் தமிழகம் முன்னோடியாகவே திகழ்கிறது. சமீபத்தில் கொரானா காலத்தில் துரிதமாக செயல்பட்டு மக்களைக் காப்பாற்றியது சுகாதார துறையின் வளர்ச்சிக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

**போக்குவரத்து வசதி :** இந்திய ஒன்றியத்துடன் ஒப்பிடும் போது போக்குவரத்து வசதிகளும் தமிழ்நாட்டில் மிகவும் சௌகரியமாக இருப்பதை நாம் பார்க்க முடியும். இன்றும் வட நாடுகளில் பேருந்துகளே இல்லாத கிராமங்கள் இருக்கின்றன. சரியான சாலை வசதிகளும் அங்கே காணப்படுவதில்லை. "அம்புலன்ஸ் வர முடியாததால் உறவினர்கள் கர்ப்பணிப் பெண்ணை தூக்கிக் கொண்டு போய் மருத்துவமனையில் அனுமதி" என்ற தலைப்புச் செய்திகளை எல்லாம் நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் தமிழகத்தில் அப்படியான நிலைமைகளை பார்ப்பது அரிது தான். காரணம் இங்குள்ள கட்டமைப்பு. இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டுமே ஏழு விமான நிலையங்கள் உள்ளன. அதில் 4 பன்னாட்டு விமான நிலையங்கள் ஆகும். இது மக்களின் வாழ்வாதாரத்தை கணக்கிடும் அளவீடாகவும் விளங்குகின்றது.

தற்போதைய தமிழ்நாட்டு முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான அரசு, மகளிருக்கு தமிழகம் முழுவதும் அரசுப் பேருந்துகளில் (சாதாரண கட்டணப் பேருந்துகள்) கட்டணமில்லாமல் பயணம் செய்யும் வகையில், திட்டத்தை அமல்படுத்தி வெற்றியடையச் செய்திருக்கிறது. இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இப்படி ஒரு திட்டம் இல்லை என்பது தமிழகத்தின் தனித்தன்மையை விளக்குகிறது.

**இட ஒதுக்கீடு :** சமூக நீதியின் அளவுகோலாக பார்க்கப்படும் ஓர் அங்கமே இட ஒதுக்கீடு. இந்தியாவில் தமிழகத்தில் மட்டுமே 69% இட ஒதுக்கீடு உள்ளது. சட்டதில் கூட 50% க்கும் மேல் இட ஒதுக்கீடு இருக்கக் கூடாது என்று கூறப்பட்டுள்ள போது தமிழகத்தில் அதற்கென ஒரு தனி ஆணையை பிறப்பித்து 69% இன்றும் எவராலும் அசைத்துப் பார்க்க முடியாத வண்ணம் பாதுக்காக்கப்பட்டு வருகிறது. இதற்கு முக்கிய காரணமும் திராவிட ஆட்சி தான்.

கல்வி, பொருளாராதம், போக்குவரத்து, சுகாதாரம், இட ஒதுக்கீடு போன்றவற்றின் அளவீடு என்பது கடந்த 50 ஆண்டு கால திராவிட ஆட்சியில் தமிழகம் அடைந்த வளர்ச்சி ஆகும். நீதிக் கட்சி காலம் தொடங்கி தற்போதுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் வரை. இதற்கு அடிப்படையாக விளங்கியது; சுயமரியாதைத் தத்துவமும் அதனடிப்படையில் உருவான மாநில சுயாட்சியும் தான்.

மாநிலங்களுக்கான அனைத்து உரிமைகளையும் பெற்றுத் தருவதன் நோக்கமே "மாநில சுயாட்சி". நீதிக் கட்சி தலைவர்கள், சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்த தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் தற்போது முதல்வராக உள்ள மு.க.ஸ்டாலின் வரை மாநில சுயாட்சி கொள்கையில் இருந்து தடம் மாறவில்லை.

தற்போது கேரளாவில் நடந்து முடிந்த சிபிஎம்

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# ஜாதி ஆணவப் படுகொலைச் சட்டம் கோரி கள்ளக்குறிச்சியில் கழகப் பரப்புரைப் பயணம்



திராவிடர் விடுதலைக்கழகம் கள்ளக்குறிச்சி மாவட்டம் சார்பில் 12.4.2022 செவ்வாய் கிழமை அன்று நயினார்பாளையம் சின்னசேலம், சங்கராபுரம், வாணாபுரம் பகண்டை கூட்ரோடு,ஆகிய நான்கு இடங்களில் ஜாதிய ஆணவ படுகொலைக்கு எதிராக சிறப்பு சட்டம் இயற்றக் கோரி ஒரு நாள் பரப்புரைப் பயணம் நடைபெற்றது.

பரப்புரையில் ஆணவக் கொலைக்கு எதிராக முழக்கம் எழுப்பிய பின் கோரிக்கையை விளக்கி பேசப்பட்டது, மாவட்ட தலைவர் க.மதியழகன், மாவட்ட செயலாளர் க.ராமர், மாவட்ட அமைப்பாளர். சி.சாமிதுரை, மாவட்ட துணை செயலாளர் மு.நாகராஜ், ரிசிவந்தியம் ஒன்றிய செயலாளர் இரா. கார்மேகம், பாக்கம் ராமச்சந்திரன், ரிசிவந்திய ஒன்றிய தலைவர் மா.குமார், மு.குமரேசன், இரா.ஜீவா, கு.பாபா மற்றும் கடலூர் மாவட்ட செயலாளர் மதன்குமார், கடலூர் மாவட்ட அமைப்பாளர் ஆசியஜோதி , விழுப்புர மாவட்ட தலைவர் பூ.ஆ. இளையரசன், திராவிடர் விடுதலைக் கழக மாநில செயற்குழு உறுப்பினர் ந. அய்யனார் ஆகியோர் பரப்புரையில் கலந்து கொண்டனர்.

# இளையராஜா முன்னுரை எழுதிய நூல் வெளியீட்டு நிறுவனத்தின் பின்னணி

இளையராஜா, மோடியை அம்பேத்கரோடு ஒப்பிட்டு புகழாரம் சூட்டி முன்னுரை எழுதியிருக்கும் புத்தகத்தை வெளியிட்டிருக்கும் BlueKraft நிறுவனம் பிரதமர் மோடியின் புகழ்பாடும் புத்தகங்களை வெளியிடுவதற்காகவே உருவாக்கப்பட்ட நிறுவனம்.

அந்நிறுவனம் இதுவரை 6 புத்தகங்களை வெளியிட்டிருக்கிறது.

அதன் இயக்குனர்களில் ஒருவராக இருக்கும் ராஜேஷ் ஜெயின் என்பவர் 2014ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் பிரதமர் மோடிக்கு சோஷியல் மீடியா பிரச்சாரம் மேற்கொண்ட மிக முக்கியமான நபர்.

மே 25, 2017ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் மாளிகையில் 'Mann Ki Baat: A Social Revolution on Radio' என்ற புத்தகம் அப்போதைய குடியரசுத்தலைவர் பிரணாபிமுகர்ஜியால் வெளியிடப்பட்டது.

புத்தகத்தை எழுதியவர் என்ற இடத்தில ராஜேஷ் ஜெயின் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால், அந்த ராஜேஷ் ஜெயின் என்ன சொன்னார் தெரியுமா ?

நான் இப்படி ஒரு புத்தகத்தை எழுதவே இல்லை என்று தெறித்து ஓடினார்.

இப்படி ஒரு கூத்து உலகில் எங்காவது நடக்குமா?

அதாவது இந்தியாவின் குடியரசு தலைவர் மாளிகையில் வெளியிடப்பட்ட புத்தகம் யாரால் எழுதப்பட்டது என்ற கேள்விக்கு இப்போது வரை பதில் இல்லை.

ஒரே மானக்கேடாக இருக்கிறது என்று Author என்ற இடத்தில BlueKraft Digital Foundation என்றே அச்சிட்டுக் கொண்டது அந்நிறுவனம்.

இப்படிப்பட்ட பின்புலம் கொண்ட நிறுவனம் வெளியிட்ட புத்தகத்திற்குத் தான் இளையராஜா முன்னுரை எழுதியுள்ளார்.

# ஜெயலலிதாவின் ஆளுநர் எதிர்ப்பும் அ.இ.அ.தி.மு.க.வின் சரணாகதியும்

நீட் மசோதா இரண்டாவது முறை சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதற்குப் பிறகும், ஆளுநர் அதை குடியரசுத் தலைவருக்கு சட்டபூர்வமாக அனுப்பி வைக்கிற கடமையி லிருந்து தவறி, தன்னுடைய ஆளுநர் மாளிகையிலே முடக்கி வைப்பதற்குத் தமிழ்நாடு அரசு எதிர்ப்பு தெரிவித்து ஆளுநர் நடத்துகிற தமிழ்ப் புத்தாண்டு தேநீர் விருந்தை புறக்கணித்திருக்கிறது. திமுக கூட்டணிக் கட்சிகளும் இதே முடிவை எடுத்து இருக்கின்றன. ஆனால் இந்த விருந்தில் தாங்கள் கலந்து கொள்ளப் போவதாக அதிமுக அறிவித்திருக்கிறது. சொல்லப்போனால், எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சராக இருந்த போது தான், நீட் விலக்கு மசோதாவை அவர் நிறைவேற்றினார். தான் முதலமைச்சராக இருந்தபோது நிறைவேற்றிய மசோதாவை இன்னும் கிடப்பில் போட்டு வைக்கப்பட்டிருப்பதை பார்த்து துளியும் கவலை இல்லை. திமுக எதிர்ப்பு, பாஜக தயவு வேண்டும் என்ற பார்வையோடு அவர் தன்னுடைய கொள்கைகளுக்கு, சமூக நீதிக்கு துரோகம் இழைக்கின்ற வகையில் இதில் கலந்து கொண்டு இருக்கிறார் என்பதையும் நாம் தமிழ்நாட்டு மக்களுக்கு நினைவுபடுத்த வேண்டி இருக்கிறது.

ஜெயலலிதா முதன் முதலாக முதலமைச்சரான போது 'சென்னா ரெட்டி' ஆளுநராக இருந்தார். அப்போது, அவர் முரட்டுத்தனமாக ஆளுநரை எதிர்த்து அடாவடி அரசியலை செய்தார். 1993ஆம் ஆண்டு சென்னை எழும்பூரில் ஆர்.எஸ்.எஸ் அலுவலகம் குண்டு வெடிப்பு தாக்குதலுக்கு உள்ளான போது, சென்னா ரெட்டி நேரில் சென்று விசாரித்தார். எப்படி 'நீங்கள் நேரில் சென்று விசாரிக்கலாம் ?' என்று கண்டனம் தெரிவித்தவர் ஜெயலலிதா. 1995இல் மதுரை காமராசர் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்க வந்த ஆளுநர் சென்னா ரெட்டி, மாவட்ட அதிகாரிகளை அழைத்துப் பேசினார் என்பதற்காக "அதிகாரிகளை அழைத்துப் பேசுவதற்கு ஆளுநருக்கு என்ன உரிமை இருக்கிறது?" என்று பிரதமருக்கு கண்டனக் கடிதம் எழுதியவர் ஜெயலலிதா. தான் தனியாக ஆளுநர் மாளிகைக்கு சென்ற போது "தவறாக நடக்க முயன்றார் ஆளுநர்" என்று பகிரங்கமாக குற்றம் சாட்டியவர் ஜெயலலிதா.

மாநில அதிகாரங்களுக்குள் ஆளுநர் தலையிடுவதை எதிர்த்து தன்னுடைய அதிமுக தொண்டர்களை வைத்து திண்டிவனம் வழியாக வந்த ஆளுநரை வழி மறித்து ஆர்ப்பாட்டம் செய்ய வைத்தவர் ஜெயலலிதா. 'ஆளுநர் ஒழிக' என்று முழக்கமிட்டு சாலை மறியலில் ஈடுபட்டார்கள். சென்னா ரெட்டி நடத்துகிற குடியரசு, சுதந்திர தின விழாக்களில் நானும் கலந்து கொள்ள மாட்டேன், அதிகாரிகளும் கலந்து கொள்ளக் கூடாது என்று உத்தரவு போட்டவர் ஜெயலலிதா. துணைவேந்தராக யாரை நியமிப்பது என்று பிரச்சனை வருகிற போது, ஆளுநருக்கு அந்த அதிகாரம் கிடையாது என்று ஆளுநரின் அதிகாரத்தைப் பறித்து சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி அதையும் ஆளுநர் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்தவர் ஜெயலலிதா. அதற்குள் சென்னா ரெட்டி மாற்றப்பட்டுவிட்டார் அந்த சட்டம் கிடப்பில் போடப்பட்டுவிட்டது.

இப்படி அடாவடித்தனமாக, முரட்டுத்தனமாக ஆளுநரை எதிர்த்து அரசியல் நடத்தியவர் ஜெயலலிதா. ஆனால், இன்று அந்த கட்சியில், புரட்சித் தலைவி, அம்மா என்று ஜெயலலிதாவை ஏற்றுக் கொண்டிருக்கிறவர்கள் அதையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு கைகட்டி பாஜகவின் தயவிற்காக, பாஜக தங்கள் மேல் உள்ள ஊழல் நடவடிக்கைகளில் இருந்து காப்பாற்றும் என்ற நம்பிக்கைக்காக இன்றைக்கு சமூக நீதிக்கு, தாங்கள் ஏற்றுக் கொண்டுள்ள தலைவிக்கு துரோகம் செய்து இந்த விருந்தில் அவர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆளுநரோடு ஜெயலலிதா நடத்தியது போன்ற அடாவடி முரண்பாட்டை பின்பற்றத் தயாராக இல்லை. அவர் மிகவும் பக்குவமாக கையாள்கிறார். ஆளுநருக்கு அவர் எழுதிய கடிதத்தில் 'ஆளுநர் தங்களது சட்டப்பூர்வமான கடமையை செய்யும் போதும், தமிழ்நாடு அரசு சட்டப்பூர்வமான கடமையை செய்யும் போது தான் தமிழ்நாடு வலிமை அடையும். மாணவர் சேர்க்கை நடைபெறுகிற போது இதை நீங்கள் மேலும் தாமதப்படுத்தி கிடப்பில் போட முடியாது என்பதற்காகவே நாங்கள் இந்த நிலையை எடுத்திருக்கிறோம்' என்று பண்போடு இந்தப் பிரச்சனையை அணுகியிருக்கிறார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மேற் கொண் டுள்ள இந்த அணுகுமுறை என்பது, சமூக நீதிக்காக, சமூக நீதி நிலைக்க வேண்டும் என்பதற்காக மேற்கொண்ட பக்குவமான அணுகுமுறை, அதிமுக இந்த விருந்தில் பங்கேற்பது என்பது, சமூக நீதிக்கும், தாங்கள் ஏற்றுக்கொண்டுள்ள தலைமைக்கும் இழைக்கப்பட்ட பச்சைத் துரோகம்.

## 15 நூல்கள் தயாராகின்றன

**பரப்புரைப் பயணத்துக்கு 15 நூல்கள் தயாராகி வருகின்றன. தேவைப்படும் தோழர்கள் பிரதிகளுக்கு முன்கூட்டியே தெரிவிக்கக் கோருகிறோம்.**

– நிர்வாகி, 'புரட்சிப் பெரியார் முழக்கம்'

**தொடர்புக்கு : 7373684049**

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாநாட்டில் முதலமைச்சர் அவர்கள் மாநில சுயாட்சியை வலியுறுத்தி பேசியுள்ளார்.

இப்படி மாநில சுயாட்சி தத்துவத்தை உயர்த்திப் பிடிக்கும் வகையில் அமைந்த முதல்வரின் அசத்தலான பேச்சு அடிமை மற்றும் பாசிச கூட்டத் திற்கு பதற வைக்கும் நிகழ்வாக அமைந்திருக்கும்.

"தந்தை பெரியாரும், திராவிட இயக்கமும் தோன்றாமல் இருந்திருந்தால் தமிழ் சமூகம் முன்னேறி இருக்காது" இதுவும் முதல்வர் ஸ்டாலின் அண்மையில் பேசிய செய்தி தான். ஆம்.

தமிழகத்தை இப்போதும் சரி இனி வரும் காலங்களில் ஆட்சி செய்யப் போகின்றவர்களும் சரி பெரியாரை தவிர்த்து விட்டு தமிழகத்தில் ஒரு புள்ளி அளவு அரசியல் கூட செய்ய முடியாது என்ற நிலையை கட்டமைத்துள்ளது பெரியாரிய இயக்கங்கள்.

நம் தமிழ் சமூகம் பிரிவினைகளற்று மென்மேலும் பகுத்தறிவு பாதையில் தொடர்ந்து வளர என்றும் தந்தை பெரியாரின் பாதையை பின்பற்றுவோம்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 21st April 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN